## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No -81 /2019

Date: 12.02.2026 PW. 2 ( அன்புச்செல்வன் )

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

தாவா சொத்துக்கள் பிரான்மலை கிருங்கா கோட்டை மற்றும் திருச்சி மாவட்டம் மருதூர் கிராமம் ஆகியவற்றில் உள்ளது என்றால் சரிதான். கடந்த 5 வருடங்களாக நான் கோயம்பத்தூர் மாவட்டத்திலிருந்து என் சொந்த ஊர் கவுண்டன் பாளையத்திற்கு அவ்வப்போது வந்து செல்வேன் என்றால் சரிதான். பிரான்மலை கிருங்கா கோட்டை ஆகிய இரண்டு ஊர்களும் கோயம்பத்தூரிலிருந்து சுமார் 200 கி.மீ மேல் இருக்கும் என்றால் சரிதான். திருச்சி மாவட்டம் மருதூர் கிராமம் கோயம்பத்தூரிலிருந்து சுமார் 150 கி.மீ மேல் இருக்கும் என்றால் சரிதான். எங்களது ரேஷன் கார்டு, ஆதார் அட்டை , வாக்காளர் அட்டை அனைத்தும் எந்த முகவரியில் உள்ளது என்றால் ரேஷன் கார்டு வாக்காளர் அட்டை ஆகிய இரண்டும் சிங்கம்புணரி வட்டம், கிழவயல் பஞ்சாயத்து பொன்னடைப்பட்டி கிராமம் என்ற முகவரியில் உள்ளது ஆதார் அட்டை கோயம்புத்தூர் முகவரியில் உள்ளது. பிரதிவாதி அருட்செல்வம் வாதி அம்பிகாவின் உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். வாதியின் மகனுக்கு தான் எனது மகளை 04.09.2025ம் தேதி திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த திருமணத்திற்கு முன் வாதியின் குடும்பத்தை பற்றி தெரியுமா என்றால் எங்களுக்கு தெரிந்தவர் தான். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள 2018ம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சாயத்து எங்கு வைத்து யார் முன்னிலையில் நடந்தது

என்றால் வேங்கைப்பட்டி கோவில் வைத்து எங்கள் சமுதாய ஊர் பொதுமக்கள் முன்பு நடைபெற்றது. 2018 ல் வேங்கைப்பட்டியில் ஊர் தலைவர் யார் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. 2018 ல் எங்கள் சமுதாய தலைவர் பெயர் என்ன என்றால் சிவந்தான்பட்டி மணி. இந்த பஞ்சாயத்தில் ஊர் பெரியவர் சமுதாய தலைவர்கள் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் ரெங்கன், மணி, நடராஜன் மற்றும் பலர் கலந்துக்கொண்டனர். எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 5 ல் நான் மேலே சொன்ன விவரங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். வாதியின் அப்பா வனஊழியராக எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை வேலை பார்த்தார் என்றால் ஞாபகம் இல்லை. ஆனால் அவர் வேலை பார்த்தது மட்டும் தெரியும். வாதி அப்பா மாத ஊதியம் எவ்வளவு வாங்கினார் எவ்வளவு வீட்டிற்கு கொடுத்தார் என்றால் ரூ.6000 மாத ஊதியம் வாங்கினார். எவ்வளவு தொகை வீட்டிற்கு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அருட்செல்வம் வாதிக்கு ஒரு வட்டி கடை வைத்துக்கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் வட்டி கடையை வாதி அம்பிகா அவரது சொந்த வீட்டை விற்று தான் வைத்தார். பிரதிவாதி வைத்து கொடுக்கவில்லை. வட்டி கடை எந்த வருடம் வைக்கப்பட்டது என்றால் 2008 அல்லது 2009 வருடமா என குறிப்பாக ஞாபகமில்லை. வட்டி கடையை எந்த ஊரில் எந்த தெருவில் அம்பிகா வைத்திருந்தார் என்றால் புரத்தாக்குடி பேருந்து நிலையம் அருகில் வைத்திருந்தார். பிரான்மலை கிராமத்தில் மற்றும் திருச்சி மாவட்டம் மருதூர் கிராமத்தில் இருந்த சொத்துக்களிலிருந்து வருடந்தோறும் வாதி, பிரதிவாதி கூட்டுக்குடும்பத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிருங்கா கோட்டை சொத்துக்களிலிருந்து

வருடந்தோறும் வாதி, பிரதிவாதி கூட்டுக்குடும்பத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் சுமார் ரூ.2 லட்சம் வருமானம் வரும். மேற்படி ரூபாய் 2 லட்சம் வருமானம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் 2018 ல் பஞ்சாயத்து பேசும்போது தான் எனக்கு தெரியும். அதற்கான ஆவணம் எதாவது பார்த்தேனா என்றால் இல்லை. இந்த தாவா சொத்துக்களின் பட்டா பிரதிவாதி அருட்செல்வம் பெயரில் தான் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியும். சுப்பையா பெயரிலிருந்து அருட்செல்வம் பெயருக்கு பட்டா மாற்றியுள்ளார் அது எந்த வருடம் என்றால் சுமார் 2013 வருடம் இருக்கலாம். தாவா சொத்துக்களுக்கு வரி அனைத்தும் பிரதிவாதி அருட்செல்வம் தான் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதி ஆகியோரின் அப்பா எந்த வருடம் இறந்துவிட்டார் என்றால் 2008 ம் வருடம் இறந்துவிட்டார். வாதி பிரதிவாதிக்கு மூத்தவரா இளையவரா என்றால் வாதி இளையவர் பிரதிவாதி தான் மூத்தவர். வாதி அம்பிகாவிற்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1997 ம் வருடம் திருமணம் ஆனது. வாதிக்கு திருமணம் ஆன பிறகு எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் திருமணம் ஆகி தூத்துக்குடியில் 2007 வரை வசித்து வந்தார். 2007 பிறகு இன்று வரை புரத்தாக்குடியில் வசித்து வருகிறார்.வாதி, பிரதிவாதி ஆகியோரின் அம்மா எந்த வருடம் இறந்துவிட்டார் என்றால் 2016 ம் வருடம் இறந்துவிட்டார். மேற்கண்ட வாதியின் அம்மா வள்ளியம்மை 2013 ம் வருடம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் போடவில்லை. அந்த பத்திரத்தில் வாதி அம்பிகா சாட்சி கையொப்பம் போட்டுள்ளராக என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி

கோகுலம் சிட் பண்டில் எழுதிக்கொடுத்த அடமானப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் போடவில்லை. அந்த அடமானப்பத்திரத்தில் அம்பிகா சாட்சியம் கையெழுத்து போட்டரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் மீண்டும் 2019 ம் வருடம் ஒரு பஞ்சாயத்து நடந்ததாக சொல்லியுள்ளேன் அது எங்கு நடந்தது என்றால் வேங்கைபட்டியில் உள்ள பிரதிவாதியின் வயலில் நடந்தது. மேற்படி பஞ்சாயத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் நிறைய பேர் கலந்துக்கொண்டனர். குறிப்பாக பெயர்கள் தெரியாது. அந்த பஞ்சாயத்தில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்றால் பிரதிவாதி சொத்து தரமுடியாது என மறுத்துவிட்டார். எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 6 ல் நான் வாதியும் பிரதிவாதியும் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்பது குறித்து நான் ஆவணங்கள் ஏதும் பார்த்தேனா என்றால் ஆவணங்கள் ஏதுவும் இல்லை. பாகம் கேட்டு வாதி அம்பிகா பிரதிவாதி மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் சிங்கம்புணரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகார் என்ன நிலையில் உள்ளது என்றால் அதன்பேரில் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் முடிக்கப்பட்டது. மேற்படி புகார் எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்றால் சுமார் 8 வருடம் முன்பு 2016 ம் வருடம் கொடுக்கப்பட்டது. வாதி பிரதிவாதியிடம் சென்று பாகம் கேட்ட போது நானும் உடன் சென்றேனா என்றால் இல்லை. மேற்படி விவரம் எப்படி எனக்கு தெரியும் என்றால் அம்பிகாவின் கணவர் சொல்லி எனக்கு தெரியும். வாதி பிரதிவாதி ஆகியோரின் குடும்பத்தை பற்றி என் மகளை வாதியின் மகனுக்கு 2025 ம் வருடம் திருமணம் செய்து கொடுப்பதற்கு முன்பு எனக்கு தெரியாது என்றும் வாதிக்கு ஆதரவாக முன்பிருந்தே எனக்கு வாதி

குடும்பத்தை தெரியும் என்றும் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் 2018 மற்றும் 2019 வருடம் பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை என்றால் நடந்ததாக நான் பொய்யாக சாட்சியம் சொல்லிகிறேனா என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.12 17:33:29 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**